**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.1396/2021

DEPOSITION OF WITNESS FOR RW-1

| | | |
|---|---|---|
| NAME | : | திரு.கணபதி |
| Father/ Husband NAME | : | திரு.மாடசாமி |
| VILLAGE | : | தெற்குகோனார்கோட்டை |
| TALUK | : | காயத்தாறு |
| CALLING | : | எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி |
| AGE | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th day of August 2025.

முதல் விசாரணை :–

நான் இம்மனுவின் 3ம் நபர் ஆவேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என்னுடைய ஓட்டுநர் உரிமம் அடையாள அட்டை நகல் சா.சா.ஆ.1. நான் ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 25.02.2021ம் தேதி TN 57 BA 0607 என்ற டிப்பர் லாரியில் டிரைவராக செட்டிக்குறிச்சியில் இருந்து தருவைகுளத்திற்கு ஓட்டிச்சென்றேன். தருவைக்குளம் ஈ.சி.ஆர் சாலையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி மெதுவாக ஓட்டிச்சென்றேன். அப்போது எனக்கு பின்னாடியிருந்து ஸ்பிளன்டர் பைக்கில் வந்தவர்கள் என்னுடைய வாகனத்தை முந்திச்சென்று என் வாகனத்திற்கு முன்பு தடுமாறி சாலையில் விழுந்துவிட்டார்கள். எனது

வாகனம் அவர்களது இருசக்கரவாகனத்தில் மோதவில்லை. இருசக்கரவாகனத்தில் சென்றவர்கள் தடுமாறி கீழே விழுந்ததால் தான் காயம் ஏற்பட்டது. தருவைக்குளம் காவல்நிலையத்தில் என்மீது தான் வழக்கு போட்டார்கள் என்றால் சரிதான். தருவைக்குளம் காவல்நிலைய குற்ற எண்.49/2021, வழக்கின் மாதிரி வரைபடம் **எ.மா.சா.ஆ.1** ஆகும். இந்த விபத்திற்கு நான் எந்த வகையிலும் பொறுப்பல்ல.

<u>மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

தருவைக்குளம் காவல்நிலைய குற்ற எண்.49/2021, வழக்கில் நான் தான் வாகனத்தை கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் ஓட்டியாதாக என் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் நான் ஓட்டிச்சென்ற லாரியின் டயர் தலையில் ஏறி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 வரைபடத்தின் படி இருசக்கரவாகனத்தில் சென்றவர் அவரது பாதையில் தான் சென்றுள்ளார் என்றால் சரிதான். இருசக்கரவாகனத்தில் சென்றவர் தான் எனது வாகனத்தை முந்திச்சென்றார் என்று நான் காவல்நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களுடைய நிறுவனமாக செல்வி செம்பர்ஸ் விபத்து குறித்த என்னிடம் விவரம் கேட்டு தான் இந்த வழக்கை எதிர்கொள்கிறார்கள் என்றால் சரிதான். தற்போது நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் 1ம் எதிர்மனுதாரின் எதிர்வுரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து என்னுடைய அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையால் நான் நடந்தது என்றும், இருசக்கர